## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

## MCOP. No.299/2024

2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஹரிதாஸ் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை:**

விபத்து சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. விபத்து நடந்த சாலை பை பாஸ் ரோடு என்றால் சரிதான். அந்த இடத்தில் நடுவில் ரோட்டின் இரண்டு பகுதியை பிரிக்கும் தடுப்பு உள்ளது என்றால் சரியல்ல. கார் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தது. நான் ரோட்டிற்கு தெற்குபக்கம் மாடு மேய்த்து கொண்டிருந்தேன். வயலில் மேய்ததுகொண்டிருந்தேனா என்றால் ரோட்டின் ஓரமாக மேய்த்துகொண்டிருந்தேன். ரோட்டை ஒட்டியுள்ள பகுதி பள்ளமான பகுதி என்றால் சரியல்ல. ஆம்புலன்சில் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. ஆம்புலன்சில் யார் உடன் சென்றார்கள் என்றால் பக்கத்தில் இருந்தவர்கள் சென்றார்கள். நான் போவதற்குள் மற்றவர்கள் வந்துவிட்டார்களா என்றால் இல்லை. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார்

என்னை மறுநாள் விசாரித்தார்கள். காரில் இருந்தவர்கள் இறந்துவிட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. இறந்துபோன நபர் என்னுடைய ஊர்காரர் தெரிந்தநபர். நான் பார்க்காத விபத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.